## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். CC. 104 /2020**

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ம் தேதி திங்கட் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வெங்கடேசன் | தொழில் | : பழ வியாபாம் |
| தந்தை பெயர் | : பாண்டுரங்கன் | சமயம் | : |
| கிராமம் | : திருவண்ணாமலை | சாதி | : |
| வட்டம் | : திருவண்ணாமலை | வயது | : 51 |

தேதி 11.09.2023

சாட்சியையும் எதிரியும் ந.பி.பெற்றாள் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. லியோடைமண்ட்ராஜ் P.C.- 2391 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை**

1. நான் திருவண்ணாமலையில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோனவர் காளி எனக்கு தெரியும். எங்கள் ஊரைச்சார்ந்தவர்.

2. கடந்த 24.06.2018 தேதியன்று நானும், காளி, காளி மனைவி செல்வி ஆகியோர்கள் பாலப்பாடி கூட்ரோட்டில் இருந்த சாவுக்கு சென்று பாலப்பாடி கூட்ரோட்டில் ரோடு தாண்டுவதற்கு நின்று கொண்டியிருந்தபோது திருவண்ணாமலையில் இருந்து பாண்டிச்சேரி செல்லும்பேரூந்து வேகமாக வந்து மோதியதில் காளி இறந்துவிட்டார். பிறகு 108 ஆம்பலன்ஸ் மூலமாக செஞ்சி அரசு மருத்துவமனைக்கு எடுத்து வந்தார்கள். அங்கு பிரேத பரிசோதனை செய்தார்கள். அதன்பிறகு ந.,பி காவல்நிலையத்திற்கு சென்று புகாரும் கொடுத்தார்கள். ே◌பாலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை:**

3. போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பில் முன்வராததால் சாட்சியின் விசாரணை இத்துடன் முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை**: இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.